# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 03–ஆம் நாள் வியாழன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆனித் திங்கள் 19–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.354/2018 –ல்**

**இடைநிலை மனு எண்.2/2025**

**தங்கம்மாள் ... மனுதாரர்/வாதி.**

**–எதிர்–**

**1.பச்சியம்மாள்**
**2.ராமமூர்த்தி**
**3.கணேசன்**
**4.அண்ணம்மாள்**
**5.கோவிந்தராஜ்**
**6.மாரியம்மாள்**
**7.சத்யா**
**8.சுந்தர்ராஜன்**
**9.ஏழுமலை**
**10.ரங்கநாதன்**
**11.சுமதி**
**12.இளவர் தீபிகா**
**13.இளவர் பாலஜி**
**இளவர்கள் 11 மற்றும் 12 rep by N.F.Guardian mother Sumathi**
**14.மலர்கொடி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.**

இந்த மனு இன்று (25.06.2025) இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.M.ராஜசேகரன்** அவர்களும் 1 முதல் 10 மற்றும் 14-ஆம் எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள நிலையில் 11 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.T.ரங்கநாதன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை

நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

**ஆணையுரை**

முதலேற்பு வழக்கில் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள வழக்கு சொத்துக்களின் முழுமையான விவரங்களை வழக்குரையில் புகுத்துவதற்காக வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு அனுமதி அளிக்கக் கோரி மனுதாரர்/ வாதியால் இந்த மனு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 06-ஆம் வகுமுறையின் 17-ஆம் விதியின்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். வழக்கு சொத்துக்களில் 1/8 பாகத்திற்காக பாகப் பிரிவினை கோரி முதலேற்பு வழக்கை தாக்கல்செய்துள்ளார். வழக்குரை தாக்கல் செய்யப்பட்டபோது வழக்குச் சொத்துக்களின் புல எண்களை மட்டும் வழக்குரையில் குறிப்பிட்டுவிட்டு மற்ற விவரங்களை குறிப்பிடாமல் விட்டுவிட்டார் என்பது தற்போதுதான் மனுதாரர்/வாதிக்குத் தெரியவந்தது. வழக்குக் சொத்துக்கள் சம்மந்தமான முழு விவரங்களை சொல்லாமல் வழக்கை நடத்தி தீர்ப்பாணை பெற்றாலும் இறுதிநிலை தீர்ப்பாணை பெறுவதில் சிக்கல்கள் ஏற்படும்.

02. வழக்குச் சொத்துக்கள் குறித்து ஏற்கனவே வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள் சம்மந்தப்பட்ட விவரங்களை 10.06.1960-ஆம் தேதியிட்ட பாகப் பிரிவினை பத்திரத்தில் "C" அட்டவணை

சொத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளன. அந்த விவரங்களையும் வழக்குச் சொத்து விவரங்களில் சேர்க்க வேண்டும். ஆகையால், வழக்குச் சொத்துப் பற்றி தெளிவான விவரங்களை சொல்வதற்காக வழக்குரையை திருத்த அனுமதி அளிக்க வேண்டும். இல்லையெனில் மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும் இன்னலும் ஏற்படும்.

**எதிருரையின் சுருக்கம்**

03. மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானவை. 10.06.1960-ஆம் தேதியிட்ட பாகப் பிரிவினை பத்திரம் பற்றி மனுவில் சொல்லியுள்ள சங்கதி பொய். வழக்குச் சொத்தின் சுவாதீனத்தில் மனுதாரர்/வாதி இல்லாததால் அதன் விவரங்கள் அவருக்குத் தெரியவில்லை. அதனால் தான் வழக்குரை தாக்கல்செய்தபோது அந்த விவரங்களை குறிப்பிடவில்லை. முந்தைய வழக்குரைஞர் குறிப்பிடவில்லை என்று மனுதாரர் சொல்லியிருப்பது பொய். வழக்கைக் காலதாமதப்படுத்த வேண்டும் என்று மனுதாரர் தாக்கல்செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

04. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு**

05. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குச் சொத்துக்கள் எவை என்பது குறித்து வழக்குரையின் சொத்துவிவர அட்டவணையில் சொல்லப்பட்டுள்ளன. புல எண்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. நான்கெல்லை விவரங்கள்

உள்ளிட்ட விவரங்கள் சொல்லப்படவில்லை. மனுதாரர் புது சொத்துக்களை சேர்க்கவோ ஏற்கனவே உள்ள சொத்துக்களின் பரப்பளவுகள் மற்றும் புல எண் விவரங்களை மாற்றவோ கோரவில்லை. ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள சொத்துக்களுக்கான கூடுதல் விவரங்களைதான் சொல்ல முற்படுகிறார். இந்த மனுவை அனுமதிப்பதால் இந்த வழக்கின் அடிப்படை மாறப் போவதில்லை புது வழக்கும் அறிமுகப்படுத்தப் போவதில்லை. ஆகையால் இந்த மனுவை அனுமதிப்பதே உகந்தது. இருப்பினும் செலவுத்தொகை வழங்குவதும் உகந்தது.

**இறுதிமுடிவு**

06. இறுதியாக, காலத்தாமதத்தால் விளைந்த இன்னலை ஈடு செய்யவதற்கு 2,000/- உருபாயை 15.07.2025-ஆம் தேதிக்குள் மனுதாரர் இந்த மனுவினை எதிர்த்து நடத்தும் எதிர்மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனுவை இந் நீதிமன்றம் அனுமதிக்கிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 03–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:– இல்லை**